கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் முத்திரைப் பணியகமும் ஒருங்கிணைந்து நடாத்தும் நாடளாவிய நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டி – 2023

- போட்டிவிதிமுறைகள்.
- ஆக்கங்கள் (சித்திரம்) சமர்ப்பிக்கப்படவேண்டிய தலைப்புகள் மற்றும் வயதுப் பிரிவுகள் (2023-12-31 ஆந் திகதியில் வயது)

1. ஆம் வயதுப் பிரிவு(10 வயதிற்குக் குறைந்த மற்றும் 10வயதுமுதல்15வயதுவரையானவர்கள்)
   தலைப்பு : "இயற்கையின் வழிகாட்டும் நட்சத்திரம் "மாகி" நம்மை கடவுளிடம் அழைக்கிறது."
2. ஆம் வயதுப் பிரிவு(15முதல்21 வயதிற்கிடைப்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குமேற்பட்டவர்கள்)
   தலைப்பு : "மேய்ப்பர்களை தெய்வீக குழந்தையிடம் அழைக்கும் தந்தையின் அன்பு."

(உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் இதில் பங்குபற்றலாம்.)

ஆக்கங்களைஅனுப்பவேண்டியவிதம்

- A4 அளவிலான கடதாசியில் (நீளம் 11.7"மற்றும் அகலம் 8.3") கிடையாக(A4 – Landscape)



- சித்திரத்தின் சுற்றுப்புறத்தில் 1/2"அளவில் இடைவெளி(½அங்குலம்) இருத்தல் வேண்டும்.
- நிறப் பென்சில்கள் தவிர்ந்த எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- இது ஒரு போட்டிமட்டுமல்லாது, அச்சித்திரங்கள் முத்திரைக்குப் பயன்படுத்தப்படுமாகையால்,அதனை முத்திரைக்கு பொருந்தக்கூடிய விதத்தில் ஆக்குதல் வேண்டும். சித்திரத்தின் இரேகைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.
- சித்திரத்தில் நத்தாரின் அடிப்படை அடையாளங்கள் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும். (உதா: வால் நட்சத்திரம்,மாட்டுத் தொழுவம்)
- சித்திரத்தின் மீது எழுத்துக்களை எழுதக் கூடாது.
- ஆக்கத்தினை சமர்ப்பிப்பவரின் பெயர், வயது, பிறந்ததிகதி, தனிப்பட்டவிலாசம், மறைக்கல்விப் பாடசாலை/பாடசாலைகளின் பெயர் மற்றும் இலகுவாக தொடர்புகொள்ளக்கூடிய பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். சான்றிதழ்களை எழுதும்பொருட்டு பெயரை ஆங்கில தடித்த எழுத்தில் (Block Letters) எழுதுதல் வேண்டும்.

- ஒரு மத பாதிரியார் / பாடசாலை அதிபர் / ஞாயிறு பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / அரசு நிர்வாக அதிகாரி ஆகிய எவரேனும் ஒருவர் தொடர்புடைய வடிவமைப்பு அவரது சொந்த வடிவமைப்பு என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- ஆக்கங்களை இடும் உறையின் இடதுபக்கமேல் மூலையில் "நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டி– 2023" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், இல 180, 3ம் மாடி, டி. பி ஜயா மாவத்தை, கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பமுடியும். அல்லது அலுவலக தினங்களில் மு.ப.8.30 தொடக்கம் பி.ப.4.15 காலப்பகுதியில் நேரடியாக கொண்டு வந்து சமர்ப்பிக்க முடியும்.

வெற்றிபெறும் ஆக்கத்தைத் தெரிவுசெய்யும் விதம்

- ஒவ்வொருவயதுப்பிரிவிலும்1, 2, 3 இடங்களுக்கு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- அதில்வெற்றிபெற்றஇரண்டு ஓவியங்கள் கிறிஸ்மஸ் தபால்தலை இரட்டையர்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும்.
- நான்கு வயதுப் பிரிவுகளின் கீழ் சிறப்பாக வரைந்த ஓவியங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆக்கங்களைத்தெரிவுசெய்தல்

- முத்திரைபணியகத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நிபுணத்துவ நடுவர் குழாம் ஊடாக தெரிவுகள் இடம்பெறும்.

- போட்டிவிதிமுறைகளுக்கு உட்படாத அனைத்து ஆக்கங்களும் நிராகரிக்கப்படுவதுடன், நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாக அமையும்.

- தபால் முத்திரைகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வெற்றிபெறும் ஆக்கங்களில், பணியகத்தின் தேவைப்பாட்டிற்கேற்பவும், முத்திரை தரங்களுக்கமையவும், உரிய விதத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு இணங்குதல் வேண்டும்.

- விண்ணப்பங்களைஅனுப்பவேண்டிய இறுதித் திகதி:- **2023-10-31**

மேலதிகவிபரங்கள் :-

தொலைபேசி இலக்கம் : **0112665584**
திணைக்கள இணையத்தளம் : **www.christian.gov.lk**
Facebook **: departmentofchristian**

பணிப்பாளர்,
கிறிஸ்தவமதஅலுவல்கள் திணைக்களம்